Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. **497/2020**
**Depostitions of PW- 1 Witness for**

| | |
|---|---|
| Name | காளீஸ்வரி |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19st day of December 2023.

Signature of Witness.

19.12.2023

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை–**

நான் தற்போது அழகாபுரியில் குடியிருந்து வருகிறேன். .கூலி வேலை செய்து வருகிறேன். 26.10.2019 ம் தேதி காலை 09.00 மணிக்கு எனது ஊரில் இருந்து கிளம்பி திருவில்லிபுத்தூர் துர்கை வேலன் நகைக்கடைக்கு வந்தேன். என்னுடைய 4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்றும், 5 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்றும், 2 கிராம் எடையுள்ள தங்க தோடு 1 ஜோடி, 2 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் ஒரு ஜோடி ஆக மொத்தம் 13 கிராம் எடையுள்ள தங்க நகைகளை அழித்து புதிதாக செயின் செய்யவதற்காக வந்தேன். பின்னர்

நகைக்கடையில் செயின் செய்வதற்கு கூடுதலாக ரூ. 50,000/- கேட்டதினால் நான் இன்றொரு நாள் வருகிறேன் என்று சொல்லிவிட்டு நகைகளை என்னுடையை மணிபர்சில் வைத்து அந்த மணிபர்சை எனது கட்டைப்பையில் வைத்திருந்தேன். ஊருக்கு செல்வதற்காக மதியம் 02.00 மணியளவில் மதுரை அரசு பேருந்தில் ஏறினேன். பஸ்சில் ஏறி உட்கார்ந்து டிக்கெட் எடுக்க எனது மணி பர்சினை கட்டைப்பையில் பார்த்தபோது நான் நகைகளை வைத்திருந்த மணிபர்சினை காணவில்லை. நான் பஸ்சில் மணிபர்சினை தேடினேன் கிடைக்கவில்லை. அதனால் வீட்டிற்கு சென்று எனது கணவரிடம் நகை காணாமல்போனது பற்றி சொன்னேன். பக்கத்தில் உள்ளவர்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தால் காணாமல் போன நகை கிடைத்துவிடும் என்று சொன்னதால் நான் திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 25.11.2019 அன்று திருவில்லிபுத்தூர் காவல் நிலையத்திற்கு வர சொல்லி சுமார் 03.00 மணியளவில் என்னுடைய நகைகளை அடையாளம் காட்டச்சொன்னார்கள். நான் என்னுடைய நகைகளை அடையாளம் காட்டினேன். எனது நகையை திருடியது மணிமாலா என்று சொன்னார்கள். எனது நகைகளை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து திரும்ப பெற்றுக்கொண்டேன். **புகார் மனு அ.சா. ஆ.1 ஆகவும், சுமார் 4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் அ.சா. பொ. 1 ஆகவும், சுமார் 5 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று அ.சா.பொ. 2 ஆகவும், சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் 1 ஜோடி அ.சா. பொ. 3 ஆகவும், சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க கம்மல்1 ஜோடி அ.சா. பொ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>-

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.